பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி14 திங்கட்கிழமை 30.09.2024 கதிர் 327

# நாடாளுமன்றத் தேர்தலில் 50% ஒதுக்கீடு வேண்டும்

## அரசியலில் ஈடுபடும் வடக்கு கிழக்கு பெண்கள் வலியுறுத்து



2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 50 சதவீத இடங்கள்பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசியலில் ஈடுபட்டுள்ள பெண்கள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் சமதரப்பாக அங்கம்வகிக்கும்சிவில்தரப்பினரின் சொல்லைக் கேட்டு நடப்பதில்லை என்றுகடந்தவாரம்யாழ்ப்பாணத்தில் கூடிய ஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஐந்து கட்சிகளும் தீர்மானித்திருந்தன. ஜனாதிபதித் தேர்தலின்போது இரு தரப்பினருக்குள்ளும் ஏற்பட்ட உரசல்களே இதற்குக் காரணம். பொதுச் சபையைச் சேர்ந்த பேராசிரியர்களும், அரசியல் பத்தி எழுத்தாளர்களும் தம்மை நடத்துகின்றனர் என்று கட்சிகளின் தலைவர்கள் கருதினர். கட்சிகள் தம்மைப் பயன்படுத்திக்கொண்டு அரசியலாபம்அடைந்தாலும், தமிழ்த் தேசியத்திற்கு உண்மையாக ☞2

## தபால் மூல வாக்கு விண்ணப்பங்கள் நாளை முதல் ஏற்பு

2024 நாடாளுமன்ற தேர்தலில் தபால்மூலம்வாக்களிப்பவர்களுக்கான மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் நாளை தொடங்கும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறவித்துள்ளது. இந்தப் பணி ஒக்டோபர் 8 முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளதாவது: ☞8

## தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் மீண்டும் கூட்டமைப்பாகச் சேரமுடியாது

### அழைப்பை நிராகரித்தது புளொட்



தமிழ்அரசுக்கட்சியின்ஆதிக்கத்தின்கீழ் மீண்டும் கூட்டமைப்பாகச் சேரமுடியாது. அனைவரும் சம பங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும். அதற்கான நேரகாலம் இருக்கிறதோ தெரியாது என்று அறிவித்திருக்கிறது புளொட்.

நாடாளுமன்றத்தேர்தலில்தமிழ்அரசுக் கட்சியின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வருமாறு விடுக்கப்பட்ட அழைப்பை -முற்றாக நிராகரித்து புளொட் அமைப்பு நேற்று வவுனியாவில் தீர்மானம் எடுத்தது.

புளொட்டின் பொதுச்சபை கூட்டம் வவுனியாவிருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேச்சிய அதன் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்சித்தார்த்தன்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பது நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்ற விடயம். ஒரு கட்சி மற்றக் கட்சியின்மீதுஆதிக்கம்செலுத்துவதை விடுத்து உண்மையான கூட்டாகச் செயற்பட ☞2

## பொதுத் தேர்தலில் இம்முறை ஈபிடிபி கொழும்பிலும் போட்டி

நடைபெறஇருக்கின்றநாடாளுமன்ற தேர்தலில் ஈ.பி.டி.பி. கட்சிகொழும்பிலும் போட்டியிடும் என கட்சியின் செயலாளர் நாயகம், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா அறிவித்துள்ளார்

நேற்றுமாலையாழ். தெல்லிப்பளை-மாவைகலட்டிபகுதி மக்களைச்சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் மத்தியில் ☞8

## சுமந்திரனின் அழைப்பில் சந்தேகம் நிராகரித்தது தமிழ் மக்கள் கூட்டணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கட்சிகளை மீண்டும் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட வருமாறு சுமந்திரன் எப்படி அழைப்பு விடுக்கலாம்? அவரது உள்நோக்கம் குறித்து சந்தேகம் எழுகின்றது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரான முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாதத்திற்கொரு கேள்வி என்ற தலைப்பில் விக்னேஸ்வரன் நேற்று ஊடகங்களுக்கு ☞8

## சங்கைப் பயன்படுத்தவேண்டாம் தேர்தலிலும் பங்கெடுப்பதில்லை

### தமிழ் மக்கள் பொதுச் சபை நேற்று உறுதியான முடிவு

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்றும் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை என்றும் தமிழ் மக்கள் பொதுச் சபை எனும் சிவில் அமைப்புக்களின் ஒருங்கிணைவு முடிவு செய்துள்ளது. தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஒரு அங்கமான இந்த அமைப்பு, ஜனாதிபதித் ☞8

## சிறைக் கைதி இறப்பு யாழில் விசாரணைகள்

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கே.புஷ்பா என்ற கைதியின் உயிரிழப்புத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர்.

அவசர மருத்துவ சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் புஸ்பா அங்கு உயிரிழந்தார் என்று யாழ்.பொலிசார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டம் ராமநாதபுரம் வட்டக்கச்சி பகுதியில் வசித்து வந்தவர் புஷ்பா. வயது 42. அவரது திடீர் இறப்புத் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தும்படி யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் ☞8

## புதன்கிழமை வருகிறது நாணய நிதியத்தின் குழு

இலங்கைக்கு வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின் மூன்றாம் கட்ட மீளாய்வுக்காக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் ஒக்டோபர் 2 கொழும்புக்கு வருகின்றனர்.

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவுசெய்யப்பட்டபின்னர்நாணய நிதிய அதிகாரிகள் மீளாய்வுக்காக வருவது இதுவே முதற்றடவை. இத்தேர்தலுக்கு முன்பதாக சுமார் ஒரு மாத காலம் நாடளாவிய ரீதியில் சகல வேட்பாளர்களாலும் முன்னெடுக்கப்பட்ட பரப்புரைகளில் நாணய நிதியத்தின் உதவித் திட்டத்தைமீளாய்வுசெய்வதும் ☞8

## சிங்களத் தேசியத்துடன் சமரசம் செய்யவா தமிழ் அரசுக் கட்சியின் ஒற்றுமை அழைப்பு

### சீறுகிறார் தமிழ் தேசியக் கட்சித் தலைவர் சிறீகாந்தா

தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்துடன் சமரசம் செய்து வைப்பதற்காகவா? மீண்டும்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைவது குறித்து தமிழ் அரசுக் கட்சி அழைப்பு விடுத்தது என்று சாடியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சிறீகாந்தா.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ☞8

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தினால் இதர தலையீடுகளை நிறுத்தலாம்

### குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்கும் போருக்கமான காரணகாரியங்களை கண்டறிந்து, நாட்டில் இன நல்லிணக்கத்தைஏற்படுத்தும்பட்சத்தில், இந்நாட்டின் மீதான இதர தலையீடுகளை இல்லாமற்செய்து, தேசத்தை அபிவிருத்தி நோக்கி கட்டியெழுப்ப முடியும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியிடம் எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் முன்வைத்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தீவில் நடைபெற்று முடிந்துள்ள ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் முடிவானது, மரபு கடந்த ஒரு ஆட்சிக்கு வித்திட்டுள்ளது. இது ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களினதும் துணிகரமான தீர்மானம் ஆகும். ☞2

## புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்தவேண்டாம்

### ஆய்வுக் குழு பரிந்துரை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்தமை தொடர்பானவிவகாரத்தில், கசிந்ததாகக் கூறப்படும்வினாக்களுக்குஅனைத்து மாணவர்களுக்கும் முழுமையான புள்ளிகளைவழங்கிவிட்டு,பரீட்சையை மீண்டும்நடத்தாமலிருக்கப்பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கல்வியாளர்கள், கல்வி உளவியலாளர்கள், மருத்துவ ☞8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இல்லை என்று பொதுச் சபையினர் கருதினர். ரணிலுக்கு தலையும் தமிழ்த் தேசியத்திற்கு வாலும் காட்டி ஏமாற்றி வருகின்றனர் கட்சித் தலைவர்கள் என்பதில் பொதுச் சபையினர் கடும் சீற்றம் கொண்டிருந்தனர். இதனால் இந்தக் கட்சிகளுடன் சேர்ந்து மீண்டும் ஒரு அரசியலை முன்னெடுக்கக்கூடாது என்றும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதாயின் பொதுச் சபையினர் தனித்துக் களமிறங்கவேண்டும் என்றும் அதற்குள் ஒரு பகுதியினர் வலியுறுத்தினர். ஆனால், ஒற்றுமை ஒற்றுமை, தேசக் கட்டுமானம் என்கிற முழக்கங்களுடன் களமிறங்கிய தாங்கள் தமக்குள்ளேயே ஒற்றுமையற்றவர்கள் என்று காட்டும் விதத்தில் ஏட்டிக்குப் போட்டியாகத் தேர்தலில் நின்றால் மக்களிடம் சிரிப்பாய் சிரித்துவிடும் என்பதால் அந்தத் திட்டத்தையும் கைவிட்டுவிட்டார்கள். மொத்தத்தில், வடக்கில் கூட்டங்கள் போட்டு உருவாக்கப்பட்ட பொதுக் கட்டமைப்புக்கு நேற்றுக் கிழக்கில் ஒரு கூட்டம் போட்டு சங்கூதப்பட்டது.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பொதுச் சபையினர் ஈடுபடுவதில்லை என்றும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மால் பயன்படுத்தப்பட்ட சங்குச் சின்னத்தை தேர்தலில் பயன்படுத்தாமல் இருக்கும்படி தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம்வகிக்கும்ஜனநாயகத்தமிழ்த்தேசியக் கூட்டணியிடம் கேட்பது என்றும் பொதுச் சபையினர் முடிவெடுத்துள்ளனர். இப்போது பொதுக் கட்டமைப்பு மூன்றாகச் சிதறியுள்ளது. அதில் உள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் அணி, பொதுச் சபையினர் ஓர் அணி, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி ஓர் அணி, ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஓர் அணி என்று அது நான்காகச் சிதறியுள்ளது.

பொதுச் சபையினர் இந்தக் கட்சிகளை நம்பிக் களம்இறங்கியது முட்டாள்தனமானது என்று இந்தப் பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்ட வந்திருக்கின்றேன். தமது சுயநலத்திற்காக தமிழ் மக்களின் நலன்களை அடகுவைக்கத் தயங்காத கட்சிகளோடு சேர்ந்து இயங்குவது சாத்தியமற்றது என்பதை பொதுச் சபையினர் இப்போதுதான் புரிந்துகொண்டுள்ளனர். அதுவும்போக, அவர்களின் முழு உழைப்பினால் உருவாக்கப்பட்ட சங்குச் சின்னத்தையும் அவர்களிடம் இருந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அபகரித்துக்கொண்டிருக்கின்றது. தமது கூட்டணியின் சின்னமாக சங்குச் சின்னத்தை மாற்றுவதன் மூலம் பொதுச் சபையினர் மற்றும் ஏனைய கட்சிகளின் முதுகில் குத்தியிருக்கின்றன 5 அரசியல் கட்சிகளும்.

அரசியல் கட்சிகளின் இத்தகைய சுயநல அரசியல் போக்கு ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையிலும் வெளிப்பட்டதன் விளைவே அந்த அமைப்பு இழுத்து மூடப்பட்டதற்கான காரணம். அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் மூலம் பொதுக் கட்டமைப்பை உருவாக்கிக்கொண்டார்கள் என்று தெரிவித்தார்கள். ஆனால், கடைசியில் படிப்பினைகளால் கிடைத்தது ஒன்றுமில்லை என்று நிரூபித்துள்ளனர்.

அதற்காகப் பொதுக் கட்டமைப்பு என்ற பெயரோ அல்லது பொதுச் சபைனரின் அரசியலோ இத்தோடு முடிந்துவிடும் என்று அர்த்தமில்லை. அவர்கள் தமிழ்த் தேசியம் மற்றும் தேசக் கட்டுமானம் பற்றிய பொதுச் சபையினரின் உருட்டுக்கள் தொடரவே செய்யும். ஏனெனில் அவர்களின் பின்னால் இருந்து புலம்பெயர் சக்திகள் சில இயக்கத் தயாராக இருக்கும் வரையில் அது தொடரும்.

இதற்கிடையில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியினர்பொதுக்கட்டமைப்பின் சங்குச் சின்னத்தைத் திருடிக்கொண்டு விட்டதனால் மட்டும் அவர்களுக்கு மக்கள் வாக்களித்துவிடமாட்டார்கள் என்று சாபம் விட்டிருக்கிறார் விக்னேஸ்வரன். உதயன்சூரியன் சின்னத்தையும் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் ஆனந்த சங்கரி பறித்துச் சென்ற பின்னர் அந்தக் கட்சியையும் சின்னத்தையும் தமிழ் மக்கள் நிராகரித்ததைப் போன்றே இவர்களுக்கும் நடக்கும் என்றும் சாபம் விட்டுள்ளார்.

எது எப்படியிருப்பினும் தமிழர்களின் ஒற்றுமைக்காகத் தொடக்கப்பட்ட முயற்சியின் படுதோல்வி காரணமாக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி, முன்னணி, ஜனநாயகக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்று ஆகக்குறைந்தது நான்கு தரப்புக்கள் போட்டியிடும். இதற்கு மேலும் பல தரப்புக்களாக தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மற்றொரு பக்கத்தில் பழைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீண்டும் வந்து சேருங்கள் என்று தமிழ் அரசுக் கட்சி விடுத்த அழைப்பை புளொட் ஏற்கனவே நிராகரித்துவிட்டது. ரெலோ இன்னும் பதில் சொல்லவில்லை. சுரேஸும் பதில் சொல்லவில்லை. சிறிகாந்தாவும் அது சுமந்திரனின் அழைப்பு என்று கூறி நிராகரித்துவிட்டார். விக்னேஸ்வரனும் சுட்ட மண் சுடாத மண் கதைகளைப் பேசியபடி தமிழ் அரசுக் கட்சியோடு சேர முடியாது என்றுவிட்டார். எனக்கென்னவோ சுமந்திரன் விரித்த வலையில் இவர்கள் தாமாகவே மாட்டிக்கொண்டார்கள் என்றுபடுகின்றது. ஒற்றுமை ஒற்றுமை என்று இந்தியாவின் அழுத்தத்தைச் சமாளிக்கத்தான் பழைய கூட்டமைப்புக்கான அழைப்பை சுமந்திரன் விடுத்தார் என்று தோன்றுகின்றது. அவசரப்பட்டு அதனை நிராகரித்து அவர் வலைக்குள் இவர்கள் விழுந்துவிட்டார்கள் என்றே நினைக்கின்றேன்.

இந்தியத் தூதரகத்தின் அழைப்பின் பேரில் இன்று கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்திக்கின்றபோது தமிழ்த் தரப்புக்களின் ஒற்றுமையை ஒன்றிணைவை அவர் வலியுறுத்த முடியாத நிலையை இப்போது இந்தக் கட்சிகள் எல்லாம் சேர்ந்து உருவாக்கிவிட்டன. இந்தியத் தூதுவருக்கும்தமிழ்கட்சித்தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்றே கொழும்பில் நடக்கின்றது. அதனை தவறுதலாக நேற்று நடக்க இருப்பதாக நேற்றைய பத்தியில் குறிப்பிட்டிருப்பேன். தவறுக்காக வாசகர்கள் என்னைப் பொருளத்தருள்க! இந்தச் சந்திப்பில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு இந்த வாரத்தில் வரவுள்ள நிலையில் அவருடனான சந்திப்புக் குறித்தே முக்கியமாக ஆராயப்படும் என்று தெரிகின்றது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சந்தித்துப் பேசிய அரசியல் கட்சிகளில் இடம்பெற்றுள்ள பெண்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர். தமது தீர்மானம் குறித்து அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு ஆசனஒதுக்கீடுசரிசமமாகப்பகிரப்படவேண்டும் என தமிழ்த் தேசியம் சார்ந்து வடக்கு கிழக்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் பெண்கள் குழு கோரிக்கை விடுக்கின்றது.

தற்போது புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க பெண் பிரதமரை நியமித்து அரசியலில் பெண்களின் வகிபாகத்தைச் சமமாக பேணியிருக்கிறார்.

இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. ஆனால் தமிழ் பெண்களாகிய எமக்கு எமது தமிழ் கட்சிகள் எவையுமே அரசியலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தினைச் சரியாக வழங்குவதில்லை. நாம் நீண்ட காலமாக அரசியல் செயற்பாடுகளில் ஆண்கள் ஈடுபடுவதற்கு பல்வேறு வகையிலும் எமது உழைப்பை வழங்கி வருகிறோம். ஆனாலும் அரசியலில் நாம் நேரடியாக ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை.

பெண்களுடைய பிரச்சினைகளை வெளியில்கொண்டுவருவதற்கும்பெண்களுக்கு பெண்களே வாக்களிப்பதற்கும் மக்கள் மத்தியில் கருத்துக்களை தெரிவிக்கும் ஆண் அரசியல்வாதிகள் பெண்களிலே படித்த ஆளுமை மிக்க, தலைமைத்துவம் கொண்ட பெண்களை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்துவதில்லை.

மாறாக பெண்களை எல்லா அரசியல் செயல்பாடுகளிலும் பயன்படுத்தும் ஆண் வேட்பாளர்கள், அவர்கள் தேர்தல்களில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதிகளாகச் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதில்லை. இவ்வாறு பல கட்சிகள் எம்மை புறந்தள்ளி வருகின்றன.

இதன் காரணமாகப் பல கல்வி கற்ற, ஆழமாகச் சிந்திக்கக்கூடிய பெண்கள் அரசியல் இருந்து புறந்தள்ளபடுகிறார்கள். எனவே இம்முறை ஜனாதிபதியின் பிரதமரின் வேலை திட்டங்களை முன்மாதிரியாக கொண்டு அனைத்து கட்சிகளும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து இரண்டு பெண்களையாவது வேட்பாளராக அறிவிக்க வேண்டும் அவ்வாறு பெண்களும் அரசியலில் ஈடுபடுத்தப்படுகின்றபோதே சரிநிகர் சமமாக பெண்கள் தமது பிரச்சினைகளை வெளியிட்டு கொண்டு வந்து மக்களுக்குச் சேவை வழங்க முடியும். இதற்காக அனைத்து தரப்பினரும் முன்வரவேண்டும்.

பெண்களைவேட்பாளராகஉள்வாங்குவது மட்டுமன்றி நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களை வெற்றி பெறச் செய்யவும் வேண்டும். அது தொடர்பிலே ஆண்கள் தமது மேடைப்பேச்சுகளில் குறிப்பிடவேண்டும்.

நாடாளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் அதிகரிக்கப்படவேண்டும். இதற்காகக் கட்சிகள் ஒவ்வொன்றும் பெண் பிரதிநிதிகளைத் தமது வேட்பாளர் உள்வாங்க வேண்டும் – என்றனர்.

## நல்லிணக்கத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில், ஊழலற்ற ஒரு தேசத்தை உலகுக்கு அறிமுகப்படுத்துகின்ற முகவரியோடு நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கையேற்றிருகின்ற கௌரவ ஜனாதிபதியாகிய தங்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்து வரவேற்றுக் கொள்கின்றோம்!

மக்களதிகாரத்தின் ஊடாக ஆணை பெற்று அரச தலைவராக பதவியேற்றிருக்கின்ற தங்களுக்கு, சமூக பொருளாதார ரீதியில் சிதைவடைந்துள்ள இந்நாட்டை துரிதமாக சீரமைக்கும் தலையாய கடமைப் பொறுப்பு இருப்பதை தாங்கள் நன்கறிவீர்கள்.

இந்த நாடு இந்நிலையை சந்திப்பதற்கு அடிப்படை காரணமாக அமைவது நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச் சினையும் அதனுடான யுத்தமும்தான். இவற்றுக்கான காரணகாரியங்களை கண்டறிந்து நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பட்சத்தில் இந்நாட்டின் மீதான இதர தலையீடுகளை இல்லாது செய்து தேசத்தை அபிவிருத்தி நோக்கி கட்டியெழுப்ப முடியும். அதுவே காலத்தின் தேவையும் கூட.

அந்த வகையில், பல்லின கலாசார பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில் ஒரு பூர்வீக இனமான தமிழ் மக்கள் தமது தாய் நிலத்தில் சம உரிமையுடனும் சமூக அந்தஸ்துடனும் வாழ்வதற்காக தசாப்தங்கள் பல கடந்தும் இன்று வரை போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பது தாங்கள் அறிந்த விடயமே.

ஆண்டாண்டுகாலங்களாகஅதிகாரக்கதிரை யேறும் எந்த ஒரு அரச தலைவரும், தமிழ் மக்கள் தமது நியாயமான வாழ்வுரிமை களை முழுமையாக அனுபவிப்பதற்கு வழிவகுத்ததில்லை. மாறாக, எமது கோரிக்கைகளை பிரிவினை வாதமாகவும் பயங்கரவாதமாகவும்சித்திரித்துசகோதரசிங்கள மக்கள் மத்தியில் இனவெறுப்பினை தோற்று வித்ததுடன், அதிகார பலம் கொண்டு தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரிந்து தத்த மது சுயலாபத்தை அனுபவித்துக்கொண்டதே இதுநாள் வரலாறாக இருந்து வருகிறது.

இதனால்தான் ஒட்டுமொத்தநாடும் அழிவுப் பாதைக்குள் அமிழ்ந்து போனது. எனினும், தமிழ் மக்கள் மீள் நிரப்ப முடியாத பல்வேறு பேரழிவுகளுக்கு ஆளானவர்களாக இன்று வரை அடையாளப்பட்டு நிற்கிறார்கள்.

எனவே, மாற்றத்தின் ஊடாக நாட்டை முன்னேற்றும் ஒரு கதாநாயகனாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதியாகிய தாங்கள், தமிழ் மக்களது பிரச்சினைகளை ஆராய்ந்து நிரந்தரமானதொரு அரசியல் தீர்வுக்கு வழி வகுப்பீர்கள் என நம்பிக்கை கொள்கின்றோம். அதன் அடிப்படையில்,

1. தமக்கென நிலம், மொழி, கலாசாரம், பண்பாடு எனும் தனித்துவ அடையாளங்களுடன் கூடிய ஒரு பூர்வீக இன மக்கள் என்ற வகையில், தமிழ் மக்கள் தமது தாயக பிரதேசங்களில் தன்னடையாளங்களுடன் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழக்கூடிய ஏதுச் சூழலை உறுதிப்படுத்த வேண்டும்.

2. தனிமனித உரிமைகளை தடுத்தாள்கின்ற வகையில் செரிவூட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக அகற்றப்பட வேண்டும்.

3. தமிழ் சமூகத்தின் பெயரில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள், ஏதேனுமொரு பொறிமுறையூடாக காலதாமதமின்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

4. தமிழ்மக்கள்மீதுதிணிக்கப்பட்டபோரின் பங்காளிகளாக இருந்து புனர்வாழ்வு என்ற பெயரில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் உட்பட சிறைகளிலிருந்து விடுதலையான தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வாதாரம் அவர்களின் உடல், உள மேம்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

5. போரின் பெயரில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் கதி அறியாது பல வருடங்களாக தெருப்போராட்டம் நடாத்திக்கொண்டிருக்கின்ற தாய்மார்களின் கண்ணீருக்கு காலம் தாழ்த்தாது நியாயமான நிரந்தர தீர்வை தர வேண்டும்.

6. போரின்பெயரில்உயிர்நீத்தஉறவுகளை நினைவேந்துகின்ற அடிப்படை மனிதநேய உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதன் ஊடாக மனக்காயங்களுக்கு ஆளாகியிருக்கின்ற மக்களை உளரீதியாக ஆற்றுப்படுத்த முடியும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

7. தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர் வாழ் பிரதேசங்களில் மாத்திரம் அளவுக்கதிகமாக குவிக்கப்பட்டுள்ள இராணுவப்படைகளின் எண்ணிக்கை தொடரில் மக்களுக்கு எழுந்துள்ள அச்ச நிலையை போக்குவது அவசியமாகிறது.

8. தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாகவும் ஏனைய அரச திணைக்களங்கள் ஊடாகவும் தமிழ் மக்களின் இனச் செரிவை குன்றச் செய்கின்ற வகையில் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற காணிஅபகரிப்புகள் மற்றும் தமிழர் பிரதேசங்களின் பெயர்களை சிங்களப் பெயர்களில் மாற்றுகின்ற சூட்சும செயற்பாடுகள் கைவிடப்பட வேண்டும்.

இதுபோன்றநிஜமாற்றங்களால்மாத்திரமே இலங்கையில் இன ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்பதையும் அதுவே இந்நாட்டை மதிக்கத்தகமுன்னேற்றத்திற்குஇட்டுச்செல்லும் என்பதையும் ஒரு சிவில் சமூக அமைப்பாக நினைவுபடுத்த கடமைப்படுகிறோம் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான செல்லுபடியான வாக்காளர் இடாப்பாக பயன்படுத்தப்படுவது 2024ஆம் ஆண்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024 (1)ளீயூ இடாப்பாகும் (2024ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இடாப்பு) நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அஞ்சல் மூல வாக்கிற்கு விண்ணப்பித்த அனைத்து வாக்காளர்களும் இம்முறை தேர்தலுக்காக மீண்டும் தமது அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கட்டாயமானது என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

அதன் பிரகாரம், தகைமையுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பங்களும் 2024.10.08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்டத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அனைத்து தாபனத் தலைவர்கள், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது என்றுள்ளது.

## தமிழ் அரசுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

அன்றுதமிழ்அரசுக்கட்சியின்சின்னத்தில் நாங்கள் கூட்டமைப்பாகச் செயற்பட்டபோது பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தாங்கள் தனியாகப் போட்டியிடப் போவதாகத் தமிழ் அரசுக் கட்சி முடிவெடுத்திருந்தது.

அதன் பின்னர் சம்பந்தருடன் நாங்கள் கலந்துரையாடச் சென்றபோது அவரும் மிகத் தெளிவாக அதே கருத்தைச் சொல்லியிருந்தார். நீங்கள் தமிழ் அரசுக் கட்சியை இல்லாமல் செய்யப் பாக்கிறீர்களா என்று அவரும் சொன்னார்.

அப்படி கூட்டமைப்பை விட்டு தமிழ் அரசுக் கட்சி வெளியேறிச் சென்றாலும் நாங்கள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக ஒன்றாகத்தான் உள்ளோம். உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுவை தாக்கல் செய்தோம். இப்போது பல கட்சிகள் அதில் இணைந்திருக்கின்றன. தமிழ் அரசுக் கட்சிதான் விட்டுச் சென்றது எனவே அதுதான் திரும்பி வரவேண்டும். அப்படி வந்தால் எமது கட்சிகளோடும், சிவில் அமைப்புகளின் கூட்டோடும் கலந்துரையாடிய பின்னர் அது பற்றி முடிவுசெய்யலாம்.

தனிப்பட்ட முறையில் சொன்னால் அவர்களது வரவு இந்த கட்டமைப்பைப் பெரிதாக்கும். அது எனக்கும் விருப்பம். அனைவரும் இணைவது தமிழ் மக்களுக்கு பலமாகவும் இருக்கும். ஆனால் அவர்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஜனாதிபதி ஒரு சமிக்ஞை காட்டினால் மட்டுமே உண்மையான மாற்றம் வந்ததாகக் கூறமுடியும்

## வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் தெரிவிப்பு

ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்கள்தொடர்பாகஒருசமிக்கையை காட்டினால் மட்டுமே உண்மையான மாற்றத்தை கொண்டுவந்தார் என எங்களால் கூற முடியும் என்று வவுனியாமாவட்டவலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி சி.ஜெனிற்றா தெரிவித்தார்.

தனதுஇல்லத்தில்நடைபெற்றஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

யுத்தம்முடிவடைந்து15வருடங்கள் கடந்துள்ளது. இறுதி யுத்தத்தின்போது சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் செல்வீச்சுக்களாலும் விமான குண்டுதாக்குதலாலும் உடல் சிதறிபடுகொலைசெய்யப்பட்டுள்ளனர். இதற்குஇதுவரைநீதிகிடைக்கவில்லை.

மேலும், இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் குடும்பம் குடும்பமாக இடம்பெயரும்போது தங்களது பிள்ளைகளை கையிலே ஒப்படைத்தனர். இவ்வாறுஒப்படைக்கப்பட்ட பள்ளி மாணவர்களும் பச்சிளங் குழந்தைகளும் ஆயுதம் ஏந்தி போராடியவர்களா? இவர்களுக்கு என்ன நடந்தது?

கடந்த எட்டு தசாப்த காலமாக பதவி வகித்த எட்டுஜனாதிபதிகளுக்கே யுத்தத்தை நடத்திய பொறுப்பு இருக்கிறது. இந்நிலையிலே கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நிகழ்ந்தது என்று தெரியாமல் வீதியிலே போராடிக் கொண்டிருக்கிறோம். ஆட்சியாளர்கள் மாறுகின்றார்கள், ஆட்சியும் மாறுகின்றது. தற்போது மாற்றம் ஒன்று நிகழ்ந்துள்ளது என்றாலும் கூட அது எந்த வகையில் எமக்கான மாற்றத்தை தரும் என்பது தெரியாது.

சர்வதேச நீதி நெறிமுறைமையை மட்டுமே நாம் இன்று வரை நம்பியிருக்கின்றோம். குறிப்பாக உள்ளக முறையில் எந்தவித நம்பிக்கையும் இல்லாத காரணத்தால் நாங்கள் சர்வதேச நீதிப் நெறிமுறைக்காகவே இதுவரை போராடிக்கொண்டிருக்கின்றோம்.

300 இற்கு மேற்பட்ட தங்களது பிள்ளைகள் எங்கே என்று தெரியாமல் போராடிக்கொண்டிருந்த தாய், தந்தையரை இழந்த நிலையிலும் அவர்களின் ஏக்கத்துக்காகவும் நாம் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கையில் சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடுபவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். எமது உறவுகள் எத்தனை பச்சிளம் குழந்தைகளையும், பாடசாலை மாணவர்களையும் இழந்து அவர்கள் மீண்டும் வருவார்களா என்ற ஏக்கத்துடனும்தவிப்புடனும்வாழ்ந்து வருகின்றனர். இவர்களை உங்கள் பிள்ளைகளாக நேசியுங்கள்.

எனவே, சர்வதேச சிறுவர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியன்று வடக்கு, கிழக்கு தழுவிய கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம்.

அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக காலை 10 மணிக்கு இந்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். எனவே இப்போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இலங்கை அரசு 75 வருடகாலமாக தமிழ் மக்களை ஏமாற்றி இருந்தது. பரம்பரை பரம்பரையாக 08 ஜனாதிபதிகள் மாறி மாறி ஆட்சி செய்திருந்த நிலையிலே எங்களுக்கு எந்தவித மாற்றங்களும் நிகழவில்லை. எனவே, எந்த நிலையிலும் எந்த ஓர் அரசையும் நம்பவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

குறிப்பாக, சர்வதேச பொறிமுறையின் ஊடாக உண்மைகளைக் கண்டறிந்து, குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுத்து மீள் நிகழாமையை உறுதிப்படுத்தும் நிலையில் புதிய ஜனாதிபதியை பற்றி யோசிக்க முடியும்.

எந்த ஜனாதிபதி வந்தாலும் எமக்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதையே சர்வதேசத்திடம் கேட்டுக்கொள்கிறோம். எனவே, புதிய ஜனாதிபதி ஏதாவது ஒரு சமிக்கையை காட்டினால் மட்டுமே உண்மையான மாற்றத்தை கொண்டுவந்தார் என எங்களால் கூற முடியும் எனத் தெரிவித்தார். (05)

# காத்தான்குடியில் 16 வயது சிறுமியை 2 மாத கர்ப்பிணியாக்கிய 16 வயது சிறுவன் கைது

தரம் 11 இல் கல்வி கற்கும் 16 வயது சிறுமியை 2 மாத கர்ப்பிணியாக்கியதாகக் கூறப்படும் அயல் வீட்டுச் சிறுவனை வெள்ளிக்கிழமை கைது செய்த சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தரம் 11இல் கல்வி கற்கும் 16 வயது சிறுவனே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 16 வயது சிறுமியின் தாயார் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ள நிலையில் சிறுமி தனது பாட்டியின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளார்.

அதேவேளை, சிறுமியின் பக்கத்து வீட்டில் வசிக்கும் 16 வயது சிறுவனின் தந்தை உயிரிழந்துள்ள நிலையில் அவரின் தாயாரும் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளார்.

இந்நிலையில், அயல் வீட்டில் வசிக்கும் சிறுவன், குறித்த சிறுமியுடன் பாடசாலையில் ஒரே வகுப்பில் கல்வி கற்று வந்துள்ள நிலையில், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட காதல் உறவு காரணமாக சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, சிறுமிக்கு வயிற்று வலி ஏற்பட்டுள்ள நிலையில் சிறுமியை வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் சேர்த்த பின்னர், சிறுமி 2 மாத கர்ப்பிணியாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்ட சிறுவனை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# மட்டு. ஆரையம்பதியில் இரு வாள்களுடன் கைதான இளைஞர் பிணையில் விடுவிப்பு



மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் இரு வாள்களுடன் கைது செய்யப்பட்ட 25 வயது இளைஞரை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் வெள்ளிக்கிழமை பிணையில் விடுவித்துள்ளார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆரையம்பதி பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 அடி நீளம் கொண்ட இரு வாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டு காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இருவரில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவரை பொலிஸார் விடுவித்துள்ள நிலையில், மற்றையவரை மட்டக்களப்பு நீதிவான் முன்னிலையில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தியபோது நீதிவான் அவரை பிணையில் விடுவித்துள்ளார்.

(05)

# லொறி – ஓட்டோ மோதி விபத்து ; குழந்தை உட்பட இருவர் காயம்



குருணாகல் - ரிதிகம வீதியில் மெஹிஎல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் குழந்தை உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.


லொறி ஒன்று வீதியில் பயணித்த ஓட்டோ ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, ஓட்டோவின் பின்புறத்தில் பயணித்த பெண்ணும் குழந்தையும் காயமடைந்துள்ள நிலையில் குருணாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(05)

## நுவரெலிய மாநகர சபை

# முன்னாள் முதல்வர் வீட்டில் திருட்டு




நுவரெலியா கஜபாபுர பகுதியில் அமைந்துள்ள நுவரெலியா முன்னாள் மாநகர சபை முதல்வரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக்கொண்டிருந்தபோது வீட்டினுள் இனந்தெரியாதோர் புகுந்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையின்போது வீட்டின் மேல் மாடியில் உள்ள ஜன்னலை உடைத்து உள்நுழைந்த மர்ம நபர்கள் தனி அறையொன்றில் உள்ள அலுமாரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டகத்திலிருந்து தங்க நகைகள் மற்றும் சில பெறுமதியான பொருள்களைத் திருடிச்சென்றுள்ளமை தெரியவந்தது.

எனினும், அலுமாரிகள் உடைக்கும் சத்தம் கேட்டு வீட்டின் உரிமையாளர்கள் மேல்மாடிக்கு சென்று பார்த்தபோது ஜன்னல் திறக்கப்பட்டிருந்ததுடன், அங்கிருந்து திருடர்கள் இருவர் தப்பி ஓடுவதையும் அவதானித்துள்ளனர். அவ்வேளை அயலவர்களின் உதவியை நாடியுள்ளனர். இருந்தும் திருடர்கள் ஓட்டோ மூலம் தப்பிச் செல்லும் காட்சிகள் வீட்டுக்கு அருகில் வீதியோரமாக பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காணொளியில் பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாக கொண்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் திருட்டுச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் வீட்டார் முறைப்பாடு செய்துள்ள நிலையில், தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் கைரேகை நிபுணர்கள், மோப்ப நாயுடன் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்ண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெண்களுக்கான இடங்கள் உரியவகையில் வேண்டும்

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் 50 சதவீத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று வடக்கு, கிழக்கு அரசியலில் ஈடுபட்டுள்ள பெண்கள் வலியுறுத்தியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று சந்தித்துப் பேசிய அரசியல் கட்சிகளில் இடம்பெற்றுள்ள பெண்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க பெண் பிரதமரை நியமித்து அரசியலில் பெண்களின் வகிபாகத்தைச்சமமாகபேணியிருக்கிறார்என்பதைச்சுட்டிக்காட்டியுள்ள பெண்கள், தமிழ்த் தலைவர்களும் அதுபோன்றே முற்போக்கோடு சிந்திக்கவும்செயற்படவும்முன்வரவேண்டும்என்று எதிர்பார்த்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர். அவர்களின் கோரிக்கை நியாயமானது. நிச்சயம் கவனத்தில் எடுக்கப்படவேண்டியது. ஆனால் பழமைவாத, ஆணாதிக்கசிந்தனையில்மூழ்கித்திளைத்திருக்கக்கூடிய தமிழ் கட்சித் தலைவர்களின் காதில் இந்தக் கோரிக்கை விழுமா என்பது கேள்விக்குறிதான்.

இலங்கைதான் உலகிற்கு முதல் பெண் தலைமை அமைச்சரை (பிரதமரை அறிமுகப்படுத்தியது) அதன் பின்னர் ஒரு பெண் அரசுத் தலைவரையும்அது கொண்டிருந்தது. நாட்டின்அதி உச்சஅதிகாரத்தில் பெண்களை உயர்த்தி வைத்தாலும் பரவலாக பெண்களுக்கு அரசியலில் கிடைக்கவேண்டிய வகிபாகம் இலங்கையில் தொடர்ந்தும் மறுக்கப்பட்டே வருகின்றது. ஆணுக்கு நிகராக பெண்களும் வருமானம் தேடத்தொடங்கிவிட்ட நிலையிலும் அனைத்துத் துறைகளிலும் அவர்களும் பணியாற்ற வந்துவிட்ட பின்னரும் மக்களுக்காக அரசியல் முடிவுகளை எடுக்கும் இடத்தில் அவர்களை இருத்தி அதிகாரத்தை அவர்களின் கைகளில் ஒப்படைப்பதற்கு இந்த ஆணாதிக்கச் சமூகம் தொடர்ந்து தயக்கம்காட்டியே வருகின்றது.

தமிழ்அரசியல்கட்சிகள்உட்படஇலங்கையில்உள்ளஅரசியல்கட்சிகள் அனைத்தும் தமக்கான மகளிர் பிரிவுகளைக் கொண்டிருந்தபோதும் அவர்களுக்கு மூன்றிலொரு பங்கு அரசியல் அதிகார இடங்கள் கட்சிக்குள்ளும் நாடாளுமன்றத்திற்குள்ளும் வழங்கப்படுவதில்லை. அந்த நிலையை மாற்றவேண்டும், அதிகாரத்தில் தங்கள் பங்கையும் உறுதிப்படுத்தவேண்டும் என்கிற குரலே இப்போது வடக்கு கிழக்கு தமிழ் பெண் அரசியலாளர்களிடம் இருந்து வந்துள்ளது.

தமிழ் பெண்களாகிய எமக்கு எமது தமிழ் கட்சிகள் எவையுமே அரசியலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தினைச் சரியாக வழங்குவதில்லை என்று பெண்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். "அரசியல் செயற்பாடுகளில் ஆண்கள் ஈடுபடுவதற்கு பல்வேறு வகையிலும் நாம் நீண்ட காலமாக எமது உழைப்பை வழங்கி வருகிறோம். ஆனாலும் அரசியலில் நாம் நேரடியாக ஈடுபடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. பெண்களுடைய பிரச்சினைகளை வெளியில் கொண்டுவருவதற்கும் பெண்களுக்கு பெண்களே வாக்களிப்பதற்கும் மக்கள் மத்தியில் கருத்துக்களை தெரிவிக்கும் ஆண் அரசியல்வாதிகள் பெண்களிலே படித்த ஆளுமை மிக்க, தலைமைத்துவம் கொண்ட பெண்களை அரசியலில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்துக்களை வலியுறுத்துவதில்லை" என்கிற உண்மையையும் அவர்கள் போட்டுடைத்திருக்கிறார்கள்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில்அனைத்து கட்சிகளும்ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்தும் குறைந்தது இரண்டு பெண்களையாவது வேட்பாளராகஅறிவிக்கவேண்டும்என்றும்அவர்கள்தமது குறைந்தபட்ச கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்கள். சரிக்குச் சமன் என்பது அவர்களின் எதிர்பார்ப்பாக இருந்தாலும் அதை இந்தக் கட்சிகளில் உள்ள ஆண்கள் ஒருபோதும் தரமாட்டார்கள் என்கிற உறுதியிலேயே அவர்கள் குறைந்தபட்சக் கேரிக்கையை முன்வைத்துள்ளார். இது அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அவமானம்.

ஆண் அரசியலாளர்கள் தங்களது வெற்றிக்காக பெண்களை வேட்பாளராக உள்வாங்காது அவர்களின் வெற்றிக்காகவும் உழைக்கவேண்டும்என்பதையும்பெண்கள்வலியுறுத்தியிருக்கிறார்கள். தம்மைக்கறிவேப்பிலையாகப்பயன்படுத்திக்கொள்வதில்அவர்களுக்கு உடன்பாடில்லை என்பதையே இது காட்டுகின்றது.

அவர்களின் இந்த நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அரசியலைக் கையாளும் திறன் பெண்களிடம் இல்லை என்று சாக்குப் போக்குச் சொல்வதை விடுத்து அவர்களுக்கு உரிய சம இடங்களை அளிக்க அரசியல் கட்சிகள் முன்வரவேண்டும். ஆண்கள் அரசியல் தலைவர்களாக இருந்தும் தமிழர்களுக்கு அவர்களால் அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்க முடிந்ததில்லை. இந்த நிலையில் பெண்களால் அரசியல் செய்யமுடியாது என்பதை அவர்கள் நிறுத்திவிட்டு அவர்களுக்கு உரிய சமவாய்ப்பை வழங்க முன்வரவேண்டும். இந்தத் தேர்தலில் அதற்கான முதல் அடியை எடுத்து வைக்கவேண்டும். அது மாற்றத்துக்கான முதல் அடியாகவும் இருக்கும்.

# அல் ஜசீராவை முடக்கிய அராஜகம் ! பாலஸ்தீன ஊடகம் மீதான தடைகள்;

**பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்த சவால்களும், அத்துமீறல்களும் எண்ணிலடங்காதவை. தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீனம் போரால் இதுவரை 175 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது**

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**





ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவில் அல் ஜசீராவின் ஊடகத்தின் அலுவலகத்தை இஸ்ரேலிய இராணுவம் வலுக் கட்டாயமாக மூடியதை பத்திரிகை சுதந்திரக் குழுவினரும் உரிமை ஆர்வலர்களும் கண்டித் துள்ளனர். இது பத்திரிகை மீதான கொடுந் தாக்குதல் என்றும் அவர்கள் வரிணித்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேலின் இராணுவத் தாக்குதல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பாலஸ்தீனியர்களுக்குஎதிரானவன்முறையினைப் பற்றி நீண்டகாலமாக அல் ஜசீரா விரிவான செய்திகளை வழங்கி வருகிறது.

இதுவரை காசாவில் போர் தொடங்கியதில் இருந்து நான்கு அல் ஜசீரா ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீன பிரதேசத்தில் உள்ள அல்ஜசிரா அலுவலகம் பலமுறை குண்டுவீசி தாக்கப்பட்டது.

கடந்தஆண்டுஒக்டோபர்மாதம்யுத்தம்தீவிரமாக தொடங்கியதில் இருந்து காஸாவில் மொத்தம் 173 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆயினும்செய்தியாளர்களை குறிவைக்கவில்லை என்று இஸ்ரேல் அப்பட்டமாக பொய் கூறி வருகிறது.

**பாலஸ்தீனஊடகம்மீதானதடைகள்:**

1948 இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு போர் நிருபர்கள்,தொழில்முறைஊடகவியலாளர்கள் மற்றும் உள்ளூர் பத்திரிகையாளர்கள் என பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாலஸ்தீன போராட்டத்தில் ஊடகங்கள் சந்தித்தசவால்களும், அத்துமீறல்களும்எண்ணிலடங்காதவை.பாலஸ்தீனபத்திரிகைகளில் 'அல்அய்யாம்'பாலஸ்தீனத்தின்இரண்டாவது பெரிய தினசரி செய்தித்தாளாகும்.

'அல் டிஃபா' 1934 மற்றும் 1948 க்கு இடையில் வெளியான ஒரு செய்தித்தாளாகும். பெலாஸ்டின், 1911 முதல் 1967 வரை யாஃபாவிலும் பின்னர் கிழக்கு ஜெருசலேமையும் தளமாகக் கொண்டு வெளியான ஒரு செய்தித்தாளாகும்.

காசாவில் இருந்து செயல்படும் முதன்மையானவாராந்திரசெய்தித்தாள்களில் அல்-ஹயாத், அல்-ஜடிதா, பாலஸ்தீனிய தேசிய அதிகாரசபையின் அதிகாரப்பூர்வ தினசரியாகும்.

போர்க் காலங்களில் இந்த ஊடகங்கள் மீதான தடைகளும் அத்துமீறல் களும் தொடர்ந்தன.

அல்-ஹூரியா, DFLP உடன் இணைந்த அரசியல்செய்தித்தாள்(பாலஸ்தீனவிடுதலைக்கான ஜனநாயக முன்னணி)வெளியாகிறது. அல் ஜாமியா, அல் அரேபியா, 1927 மற்றும் 1935 க்கு இடையில் வெளியான தினசரி செய்தித்தாள். லிசான் அல் அரப், ஜெருசலேமில் உள்ள ஒரு செய்தித்தாள் 1921 மற்றும் 1925 க்கு இடையில் வெளியிடப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் பாலஸ்தீனம்-இஸ்ரேல் ஜர்னல், ஒரு சுயாதீனமான, இலாப நோக்கற்ற, காலாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படுகிறது. அத்துடன் தி பாலஸ்தீன டெலிகிராப், காசா பகுதியில் உள்ள முதல் இணைய செய்தித்தாள் ஆகும்.

பாலஸ்தீன டைம்ஸ், 2006 முதல் 2007 வரை ஒரே ஆங்கில மொழி தினசரி பாலஸ்தீனிய செய்தித்தாள் வெளிவருகிறது. திஸ் வீக் இன் பாலஸ்தீனமானது, பாலஸ்தீனத்தின் கலாச்சார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளை உள்ளடக்



தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# அல் ஜசீராவை முடக்கிய அராஜகம் !

4ம் பக்க தொடர்ச்சி...........

கிய ஒரு மாத இதழாகும். அல்-குத்ஸ், ஜெருசலேமைத் தளமாகக் கொண்ட தினசரி செய்தித்தாள், அல்-குத்ஸ் ஒரு சுயாதீன பான்-அரபு தினசரி செய்தித்தாள், லண்டனில் வெளியிடப்பட்டது.

**பாலஸ்தீன தொலைக்காட்சி:**

பாலஸ்தீனத்தில் உள்ள தொலைக்காட்சியானது வரலாற்று நிகழ்வுகள், பொருளாதார அபிவிருத்தி நோக்கிச் செல்லும் நிகழ்ச்சிகளை காண்பிக்கிறது. ஆனால் ஒரு முக்கிய கருப்பொருள் அரசியல். பாலஸ்தீனிய அதிகாரம் அதன் குடிமக்களுக்காக

உருவாக்கப்பட்ட பொது நிகழ்ச்சிகள் மூலம் ஒரு பகுதியாக கலாச்சார

விழுமியங்களை உருவாக்குகிறது. குழந்தைகள் நிகழ்ச்சிகள் முதல் நாடகங்கள் வரை நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகும்.

பாலஸ்தீனிய அதிகாரசபை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் மற்றும் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் பாலஸ்தீனிய அதிகாரத்தின் குடிமக்களால் பார்க்கப்படும் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனங்கள் மேல் எப்போதும் ஓர் இராணுவ அச்சுறுத்தல் இருந்த வண்ணமே உள்ளது.

**பாலஸ்தீன தொலைக்காட்சி**

அல்-அக்ஸா டிவி, அல்-குட்ஸ் டிவி, பாலஸ்தீன ரேடியோ மற்றும் டிவி கார்ப்பரேஷன், பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழகம்(PBC), பாலஸ்தீனிய செயற்கைக்கோள் சேனல் மற்றும் சனாபெல் டிவி ஆகியன முக்கியமான பாலஸ்தீன தொலைக்காட்சி நிறுவனங்களாகும்.

பாலஸ்தீனிய ஆட்சி அதிகாரத்தின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட பாலஸ்தீன தொலைக்காட்சி, 1 ஜூலை 1994 இல் நிறுவப்பட்டது. இஸ்ரேலிய இராணுவ அச்சுறுத்தலுக்கு எப்போதும் முகங்கொடுக்கும் பாலஸ்தீன தொலைக்காட்சி 19 ஜனவரி 2002 அன்று இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி அழித்தனர்.

பாலஸ்தீனிய துப்பாக்கிதாரியால் ஆறு பேரைக் கொன்றதற்கு பதிலடியாகக் கூறி,ரமல்லாவில் உள்ள பாலஸ்தீனிய ஒலிபரப்புக் கழக(PBC) இன் ஐந்து மாடி பிரதான கட்டடம் மற்றும் ஒலிபரப்புக் கோபுரத்தை இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் அழித்தனர்.

**பத்திரிகையாளர்க்கு அச்சுறுத்தல்:**

பாலஸ்தீனத்தில் அல் அய்யம்,அல்-ஹயாத் அல்-ஜடிதா ,அல் கர்மில் ,அல்

மனார்,அல் மசார் ஆகிய பத்திரிகைகள் போர்க்காலத்திலும் வெளிவருகிறது. காசாவில் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் இணையப் பிரச்னைகள் நிலவி வருகின்றது. தொடர்ந்து காசா நகரில் இஸ்ரேலின் நேரடி அச்சுறுத்தல் பத்திரிகையாளர்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் அல் குத்ஸ்,பாலாஸ்தீன் அல்-முஸ்லிமா,அல்-இத்திஹாத்,குல் அல் அரபு அல்-மதீனா ஆகிய ஊடகங்களின் பத்திரிகையாளர்க்கு இஸ்ரேலின் நேரடிஅச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். பாலஸ்தீனத்தின் ஹமாஸ் -இஸ்ரேல் படையினருக்கும் இடையே கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி ஆரம்பித்த போர் தற்போது தீவிரமாக தொடர்ந்து வருகிறது. இஸ்ரேல் படையினர் காசா பகுதியை கொடூரமாக தாக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் காசாவில் போர் பற்றிய விவரங்களைச் சேகரிக்க பல்வேறு நாட்டில் இருந்து பத்திரிகையாளர்கள் சென்றிருந்தனர். தகவல் சேகரிக்கச் சென்றவர்களில், இதுவரை 175 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர். அதில் 150 பாலஸ்தீனர்கள், 4 பேர் இஸ்ரேலைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் லெபனானை சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

பல பத்திரிகையாளர்களுக்கு இஸ்ரேல் நேரடி அச்சுறுத்தலை கொடுத்துள்ளதால் போர்க்கள தகவல்களை சேகரிப்பதை பத்திரிக்கையாளர்கள் குறைத்துள்ளனர். அத்துடன்பாலஸ்தீனபத்திரிகையாளர்களை பாதுகாக்க சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

தற்போதய இஸ்ரேல்-பாலஸ்தீனம் போரால் இதுவரை 175 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்கள் பாதுகாப்புக் குழு உறுதி செய்துள்ளது.

இதற்கு முன்பாக 1992 - 2022 வரை இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட

பாலஸ்தீனப் பிரதேசத்தில் வேறு 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்எனஉழைக்கும்பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு ஆவணப்படுத்தியுள்ளது.

மே 2022 வரை, மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் 2008 முதல் மோதலின்

4ம் பக்க தொடர்ச்சி...........

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# அல் ஜசீராவை முடக்கிய அராஜகம் !

4ம் பக்க தொடர்ச்சி...........

விளைவாக6,036பாலஸ்தீனியர்கள்மற்றும்272இஸ்ரேலிய இறப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆவணப்படுத்தியுள்ளது..

**அமெரிக்க ஊடகர் ஷிரீன் அபு அக்லே கொலை :**




ஷிரீன் அபு அக்லே (Sirin Abu Aqle) ஏப்ரல் 3, 1971இல் பிறந்த அமெரிக்க ஊடகர் 25 ஆண்டுகளாக அல் ஜஷீராவின் பத்திரிகையாளராகப் பணியாற்றி உள்ளார். இவரின் கொலை சர்வதேச ஊடகப்பரப்பில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரையில் உள்ள ஜெனின் அகதிகள் முகாமில் நீல நிற மேல் அங்கி அணிந்தபடி ஊடகராக பணியாற்றிய வேளையில் இஸ்ரேலிய சிப்பாய் ஒருவரால் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனப் பகுதிகளில் பல தசாப்தங்களாக ஊடகப் பணி செய்ததற்காக மத்திய கிழக்கு முழுவதும் அபு அக்லே மிகவும் பிரபல்யமான ஒருவராக இருந்தார். மேலும் பல அரபு மற்றும் பாலஸ்தீனிய பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகக் காணப்பட்டார்.

11 மே 2022 அன்று அவர் இறந்தவுடன், இஸ்ரேல் கொலைக்கான பொறுப்பை ஏற்க மறுத்தது மற்றும் பாலஸ்தீனிய போராளிகளை குற்றம் சாட்டியது. இக்கொலை தனது படைகளால் 'தற்செயலாக' தாக்கப்பட்டிருக்கலாம் என்பதை முழுமையாக ஒப்புக் கொள்ளும் வரை படிப்படியாக அதன் கதையை மாற்றியது. ஆனாலும் குற்றவியல் விசாரணையை இஸ்ரேல் மேற்கொள்ள மறுத்தது.

**பாலஸ்தீன பெண் ஊடக முன்மாதிரி:**

சர்வதேச ஊடகங்கள், ஐ.நா மனித உரிமைகள் உயர்ஆணையர்மற்றும்அமெரிக்கவெளியுறவுத் துறை ஆகியவற்றால் நடத்தப்பட்ட பல சுயாதீன விசாரணைகளுக்குப் பிறகு இக்கொலையை விசாரிக்கஅனுமதிவந்தது. இஸ்ரேலியபடைகளால் அபு அக்லே வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டு மருத்துவ உதவி மறுக்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது. ஆயினும்

நவம்பர் 2022 இல், அமெரிக்க நீதித்துறை இக்கொலை பற்றிய விசாரணையைத் தொடங்கியது. இந்த நடவடிக்கையை இஸ்ரேல் கண்டித்ததுடன் ஒத்துழைக்க மறுத்தது.

பத்திரிக்கையாளர் அபு அக்லே கொலைக்கான பொறுப்பேற்றுள்ள இஸ்ரேலிய சிப்பாய் பொறுப்புக்கூறப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. அவர் இறந்த விதம் மற்றும் அவரது இறுதிச் சடங்கின் வன்முறை இடையூறு ஆகியவை இஸ்ரேலுக்கு பரவலான சர்வதேச கண்டனத்தை ஏற்படுத்தியது.

**இறுதிச் சடங்கில் பல்லாயிரம் மக்கள்:**

அவரது இறுதிச் சடங்கில் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொடிகளை ஏந்தியபடியும், தேசியவாதப் பாடல்களைப் பாடியபடியும் கலந்து கொண்டனர். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஜெருசலேமில் நடந்த மிகப்பெரிய பாலஸ்தீனிய இறுதிச் சடங்கு இது என்று நம்பப்படுகிறது.

ஆனாலும் அவரது இறுதிச் சடங்கின் போது இஸ்ரேலிய காவல்துறை அதிகாரிகள் கிழக்கு ஜெருசலேமில் உள்ள செயின்ட் ஜோசப் மருத்துவமனையில் கையெறி குண்டுகளால் தாக்கினர்.

மருத்துவமனையையே தாக்கிய இஸ்ரேலிய பொலிசார் நோயாளிகளை தாக்கினர், தள்ளி மிதித்து கையெறி குண்டுகளை வீசினர். மருத்துவ ஊழியர்களை காயப்படுத்தி தீக்காயங்களை உருவாக்கினர்.

தற்போதய போர்ச்சூழலில் 26 அக்டோபர் 2023 அன்று, அவர் கொல்லப்பட்ட இடத்தில் எழுப்பப்பட்ட ஒரு நினைவுச்சின்னம் இஸ்ரேலிய இராணுவத்தால் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டது.

**காசாவில் கொலையான ஊடகர்கள்:**

காசா பகுதிபோரின் போது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன. அக்டோபர் 7இல் முகமது அல்-சால்ஹி, நான்காவது அதிகாரச் செய்தி நிறுவனத்திற்கான புகைப்படப் பத்திரிக்கையாளர், மத்திய காசாவில் உள்ள பாலஸ்தீனிய அகதிகள் முகாமுக்கு அருகாமையில் சுடப்பட்டார்.

அதே நாளில் முகமது ஜார்கோன், ஸ்மார்ட் மீடியாவுடன் இணைந்த ஒரு பத்திரிகையாளர், ரஃபாவின் கிழக்கே உள்ள ஒரு பகுதியில் மோதல் குறித்து செய்தி வெளியிட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டார். அக்டோபர் 7 இல் இப்ராஹிம் முகமது லாஃபி, ஐன் மீடியாவின் புகைப்படக் கலைஞர், ஈரெஸ் கடக்கும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அசாத் ஷாம்லாக், அக்டோபர் 8இல் ஒரு ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளர், தெற்கு காசாவில் ஷேக் இஜ்லினில் உள்ள அவர்களது வீட்டில் இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது உறுப்பினர்களுடன் கொல்லப்பட்டார்.

அக்டோபர். 10இல் ஹிஷாம் அல்ன்வாஜா, கபார் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளரும் ரிமாலில் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதே நாளில் முகமது சோப், கபார் நியூஸ் ஏஜென்சியின் புகைப்படக் கலைஞரும் ரிமாலில் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட பத்திரிகையாளர்களின் இன்னும் நீளமானது. இதுவரை 175 ஊடகர்கள் இஸ்ரேலிய படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.



# யாழ். பல்கலையில் ஆவணப்படத் திரையிடலும் சமகால சமூகபோக்குகள் பற்றிய கலந்தாய்வும்

யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சினையை பேசுபொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம்' எனும் ஆவணப்படத் திரையிடலும் சமகால சமூகப் போக்குகள் பற்றிய உரையாடலும் ; யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் கடந்த வியாழக்கிழமை புதன்கிழமை கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

தாயகத்தின் உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அவற்றைப் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு என்பவற்றை ஆவணப்படுத்துவதனூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இந்தத் திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் இணைச் செயலாளர் சி.சிவகஜன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வு புதன் காலை மாணவர் அரங்கானது மாணவர்களின் தனித்திறன் ஆற்றல்களை வெளிக்கொணருதல், சமூக, அரசியல், பண்பாட்டு, பொருண்மியம் சார்ந்து மாணவர்களின் சமூகம் சார் உரையாடலுக்கான வெளியாக வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமைகளில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடமாணவர்ஒன்றியத்தின்ஒருங்கிணைப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சம்மாந்துறை பத்திரகாளி அம்பாளின் பாற்குடபவனி



(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு வைபவத்தின் பாற்குடபவனி வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நேற்று 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி ஆலய துணை பூசகர் நிரோஜன் முன்னிலையில் இடம்பெற்றது.

இச்சடங்கு கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று , ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி தீமிதிப்பு வைபவம் நிறைவுபெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்கு இடம்பெற்று வருகின்றது .

தினமும் பகல் பூசை 1.00 மணிக்கும் ,இரவு பூசை 7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருகிறார்.

03 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம் பெற்று தீமிதிப்பு வைபவம் இடம்பெறும் .

கூடவே ,அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது.

இறுதியாக 10ஆம் திகதி வியாழக்கிழமை இரவு எட்டாம் நாள் வைரவர் இடும்பன் திருச்சடங்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபைத்தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவிக்கின்றார்.(05)



# சர்வதேச இந்து மத பீடம் புதிய ஆளுநருக்கு வாழ்த்து

9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்கள் மூலம் முன்னாள் அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகம் அவர்களுக்கு ஆளுநர் நியமனத்தை வழங்கி உள்ளார்.

இதனை முன்னிட்டு வடமாகாண ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதாக அதன் செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபராக அவர் பதவி வகித்த காலத்தில் மிகுந்த நேர்மையாகவும் மக்களுக்காக அர்ப்பணிப்புடனுமான சேவையிலும் ஈடுபட்டவர் என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம். அவரது அந்த உண்மையான உழைப்புக்கும் நேர்மைக்கும் இந்த ஆளுநர் பதவி கிடைத்தது என்று சொன்னால் அது மிகையாகாது அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும் என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# கொஸ்வத்தை பகுதியில் வீடொன்றில் தீ விபத்து

## ஒருவர் உயிரிழப்பு

கொஸ்வத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்மோதர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கொஸ்வத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தும்மோதர பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது வீட்டில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் தனது அறையில் தனிமையில் இருந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், உயிரிழந்தவரது சடலம் சிலாபம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்வத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மல்லிகைத்தீவு மாணவருக்கு 23 சைக்கிள்கள் அன்பளிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்லிகை இத்தீவு கிராம மாணவர்களுக்கு 23 சைக்கிள்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன .

குறித்த வைபவம் மல்லிகைத் தீவு அ.த.க. பாடசாலையின் அதிபர் எஸ். ஜதீஸ்வரர தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன் போது அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நாசிர் அலி, உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, ஆகியோருடன் முட்டைக்கோஸ் நண்பர்கள் வட்ட இணைப்பாளர் சமூக செயற்பாட்டாளர் பி. அனுசன், இலங்கையை 42 நாள்களில் சுற்றி வந்த எஸ்.கே முனாபிர் ஆகியோர் கலந்துசிறப்பித்தார்கள்.

மல்லிகைத்தீவு கிராமத்தில் இருந்து மல்வத்தை விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு மூன்று கிலோ மீற்றர் தினமும் நடந்து சென்று வந்த 23 மாணவர்களுக்கு அவர்களின் தொடர் கல்வி வசதியை மேம்படுத்தும் பொருட்டு இந்த 23 சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முட்டைக்கோஸ் நண்பர்கள் அமைப்பும் யுரூப் நண்பர்கள் சுமார் 12 லட்சம் ரூபா செலவில் இந்த சைக்கிள்களை வழங்கி வைத்தனர்.

அதிதிகள் அனைவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கு ஆரம்பத்தில் தொடர்பு கொண்ட மல்லிகைத்தீவு மாற்றுத்திறனாளி கே. அருந்தவராஜா வைபவத்தில் பாராட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (05)







# மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் இளம் குடும்பஸ்தர் பரிதாபமாக உயரிழப்பு

(கஜிந்தன்)

மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெள்ளிக்கிழமை பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பாற்பண்ணைவீதி, திருநெல்வேலி பகுதியை சேர்ந்த பாலசேகர் ஹரிபிரசாத் (வயது 26) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் -

இவர் கடந்த 15ஆம் திகதி முல்லைத்தீவில் உள்ள கோவில் ஒன்றுக்கு நாதஸ்வர கச்சேரிக்கு சென்றுள்ளார். பின்னர் 16ஆம் திகதி வீட்டுக்கு வந்துகொண்டு இருந்தவேளை சாவகச்சேரியில் உள்ள பாடசாலை ஒன்றின் மதில் மீது மோதி விபத்துக்குள்ளானார்.

இந்நிலையில் அம்புலன்ஸிற்கு அறிவித்தல் வழங்கிய நிலையில் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரே அம்புலன்ஸ் வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. அதன்பின்னர் அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழ் அரசுக்....

### (இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்திருப்பதுதமிழ்அரசுக்கட்சிசின்னத்தில் போட்டியிட வருமாறு. இது பழையபடி தமிழ் அரசுக் கட்சிதான் முடிவெடுக்கப்போகின்றது என்ற அடிப்படையிலும், ஆதிக்கம் தமிழ் அரசுக் கட்சியினுடையதே நீங்கள் சேருங்கள் உங்களுக்கு நாங்கள் பார்த்து தருவோம் என்றவாறான ஒருநிலைப்பாடே. அப்படியான நிலைப்பாட்டின் கீழ் நாங்கள் அவர்களுடன் சேரமுடியாது.

அனைவரும் சம பங்காளிகளாக ஒரு கூட்டமைப்பாக இணைந்தால் அதில் சேரமுடியும். அதற்கான நேரகாலம் இருக்கிறதோ தெரியாது. அவர்கள் மூன்று நாட்களையேஅவகாசமாகக்கொடுத்துள்ளனர்.

ஜனநாயகதமிழ்தேசியகூட்டணிக்குசங்கு சின்னத்தை எடுப்பதற்கான ஒரு அபிப்பிராயம் இருந்தது. அதற்கான முயற்சியினை செய்வதாகத் தீர்மானித்திருக்கின்றோம். அதனைச் செய்வோம்.

அத்துடன் இளைஞர்களையும் நிச்சயமாக உள்ளே கொண்டுவரவேண்டும். அதேபோல அனுபவம்உள்ளவர்களும்இருக்கவேண்டும். இருந்தாலும் அப்படி ஒரு கருத்தாக்கம் மக்கள் மத்தியில் இல்லை. தேர்தலில் தாங்கள் போட்டியிடுவதற்காக சிலர் உருவாக்கும் ஒரு கருத்தே இது. இது கட்சிகளைப் பலவீனப் படுத்துகின்ற ஒரு விடயம். நாங்கள் கடந்த முறையும்இளைஞர்களைநிறுத்தியிருந்தோம். இப்போதும் நிச்சயமாக இளைஞர்கள் கேட்பார்கள்.

தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பது பிரதிநித்து வத்தில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும். அதற்காகவே ஒரு கூட்டமைப்பை உருவாக்கவேண்டும் என்று பார்க்கின்றோம். சிலர் சேரமுடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக டக்ளஸ்தேவானந்தாவும்நாங்களும்சேருவது கஸ்ரமான விடயம். ஆளும்தரப்பில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தால் அது சொல்வதையே சொல்லவேண்டிய சங்கடம் இருக்கிறது. எமது சார்பாகக் கதைக்க முடியாது. மௌனியாகவே இருக்க வேண்டும்.

அபிவிருத்திப் பணிகள் செய்யலாம். ஆனால் 1956 இற்குப் பின்னர் நியாயமான ஒரு தீர்வினை நோக்கியே தமிழ் மக்கள் வாக்களித்து வருகின்றனர் என்றார்.

## சங்கை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் தமது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியநேத்திரனின் சங்குச் சின்னத்தை இந்த நாடாளுமன்றத்தேர்தலில்பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு 7 தமிழ்க்கட்சிகளிடம்கோருவது என்றும் முடிவு செய்துள்ளது.

திருகோணமலையில்நேற்றுநடந்ததமிழ் மக்கள் பொதுச் சபையின் கூட்டத்தில் இந்த -முடிவுஎடுக்கப்பட்டதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபை நேரடியாக ஈடுபடாது. இத்தீர்மானம்செப்டம்பர்29,திருகோணமலை உப்புவெளி,ஆயர் இல்ல மண்டபத்தில் நடந்த பொதுச்சபைக்கூட்டத்தில்முடிவெடுக்கப்பட்டது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ்த் தேசிய கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பைஉருவாக்கி,பொதுவேட்பாளரை களம் இறக்கின. ஆனால் அதுபோல நாடாளுமன்றத் தேர்தலில் நேரடியாக தேர்தலில்ஈடுபடுவதில்லைஎன்றுபொதுச்சபை முடிவு எடுத்துள்ளது. மேலும் பொதுச் சின்னம் ஆகிய சங்குச் சின்னத்தை இத்தேர்தலில் பயன் படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுக் கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளிடம் கேட்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது" என்றுள்ளது.

## தபால் மூல ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால் மூல வாக்களிப்புக்கான செல்லுபடியான வாக்காளர் இடாப்பாக பயன்படுத்தப்படுவது 2024ஆம் ஆண்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024 (1)எீயூ இடாப்பாகும் (2024ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இடாப்பு) நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக, அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக அஞ்சல் மூல வாக்கிற்கு விண்ணப்பித்த அனைத்து வாக்காளர்களும் இம்முறை தேர்தலுக்காக மீண்டும் தமது அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் கட்டாயமானது என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

அதன் பிரகாரம், தகைமையுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பங்களும் 2024.10.08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய மாவட்டத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் (மாவட்டத் தேர்தல் அலுவலகம்) கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அனைத்து தாபனத் தலைவர்கள், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது என்றுள்ளது.

## சிங்களத் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதுதொடர்பில்மேலும்தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பல்வேறுகாலகட்டங்களில்வெளியேறியவர்கள் மீண்டும் இணைய வேண்டும் எனப் புன்முறுவலோடுஇருகரம்கூப்பிவரவேற்பதாக சுமந்திரன் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

அவருக்கு நாங்களும் புன்முறுவலோடு பதிலளிக்கக்கடமைப்பட்டுள்ளோம். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் அசுக் கட்சியோடு இணைந்து கூட்டாகச் செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தயாராகவுள்ளது. ஆனால், யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியாகவும், கடந்த கால அனுபவ ரீதியாகவும் பல மனஸ்தாபங்கள் உள்ளன.

இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது எதற்காக? தமிழ்த் தேசியத்தை சிங்கள தேசியத்துடன் சமரசம் செய்துவைப்பதற்காகவா? அல்லது இருக்கின்ற பதவிக் கதிரைகளை பறி போகவிடாமல் தக்கவைப்பதற்காகவா? அல்லது கடந்த காலம் போல் ஆட்சியாளர்களுடன் மறைமுக சமரசம் செய்வதற்காகவா? போன்ற கேள்விகளை எழுப்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

ஒற்றுமை என்பது கொள்கையுடன் குறிக்கோளுடன் இருக்கவேண்டுமானால் தமிழ்அரசுக்கட்சியில்ஆதிக்கம்செலுத்துகின்ற சுமந்திரன் தலைமையிலான அணியுடன் ஒருபோதும் அந்த ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது, ஏற்படுத்தக்கூடாது என்பதே தமிழ்த் தேசியக் கட்சியின் முடிவு ஆகும். முதலிலே தமிழ் அரசுக் கட்சிக்குள் ஒற்றுமைப்பட முடியாதவர்கள் ஒற்றுமைக்கான அழைப்பை புன்முறுவலோடு விடுப்பது ஒட்டுமொத்த தமிழர்களையும் ஏமாற்றும் செயலாகும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியோடு இணைந்து வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பாகப் போட்டியிடுவதா இல்லையா? என்பது குறித்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடி ஆராயவுள்ளது.

அதில் தமிழ்த் தேசிய கட்சியின் முடிவை உறுதியாகத் தெரிவிப்போம் - என்றார்.

## பொதுத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றியபோது, தான் மீண்டும் நாடாளுமன்றம் செல்கிறார் என்று நம்புகிறார் எனவும், தேர்தலின் பின்னர் ஆட்சியில் இருப்பவர்களுடன் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனும் கொள்கையின்படி இணைந்து செயற்பட உள்ளார் எனவும் தெரிவித்தார்.

## சிறைக்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகர் சூரியபண்டார பணிப்புரை விடுத்துள்ளார்.

தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சாம்லி பலிஹேன, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் பரிசோதகர் இந்திக்க அபேகுணசேகர ஆகியோரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## சுமந்திரனின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேள்வி :- தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்றவர்களை திரும்ப வருமாறு சுமந்திரன் அழைத்துள்ளார். நீங்களும் தமிழ்த் தேசியத்தில் ஈடுபாடுடையவர்கள் அனைவரும் சேர்ந்து தேர்தலில் நிற்பது அவசியம் என்று கூறியுள்ளீர்கள். அப்படியானால் நீங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் மீண்டும் சேரும் வாய்ப்பு உள்ளதா?

பதில்:- இல்லை. கட்சிகளோ, கூட்டுக்களோ, சின்னங்களோ தமிழ்த் தேசியத்திற்கு முக்கியமல்ல. தமிழ்த் தேசிய சிந்தனை உடையவர்களே முக்கியம். அண்மையில் தமிழ் மக்கள் சார்பில் தமிழ்த் தேசிய சிந்தனையுடைய அரியநேத்திரனை 7 தமிழ்க் கட்சிகளும் 80 சிவில் சமூகத்தினரும் சேர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபடுத்தினார்கள்.

நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும் இதற்கென வெளியில் வந்து பல விதங்களில் அரியநேத்திரனுக்கு உதவினேன். பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் கூட்டங்களில் பேசினேன். கொழும்பில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசினேன். கட்டமைப்பு பற்றிய பல கேள்விகளுக்குப் பத்திரிகைகளிலும், இணையத்தளங்களிலும், வெளிநாட்டு ஊடகங்களிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதில் இறுத்தேன். ஆனால் அரியநேத்திரனை முன்னிறுத்திய பின் எமது ஏழு கட்சிகளில் அவர் சார்பாக வெளிப்படையாக வெளியே வந்து தமது ஆதரவைத் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்? பலர் இக் கால கட்டத்தில் காணாமல் போய்விட்டார்கள்.

ஒரு வைத்தியசாலையில் இருந்து, நவீன பரிசீலனைகளை மேற்கொள்ள என்னை மற்றொரு வைத்தியசாலைக்கு அனுப்பியபோது இடைப்பட்ட காலத்தில் தேர்தல் நியமன நாளன்று தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் அரியநேத்திரனுடன் நானும் சிற்பரனும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். சிரமம் பாராமல் நாம் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்குக் காரணம் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் வேட்பாளர் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறவேண்டும் என்பதே.

இவ்வாறான ஆதரவையும் அனுசரனையையும் குத்து விளக்கை மையமாக வைத்து செயற்பட்டு வரும் கட்சிகளிடையே நாங்கள் காணவில்லை. அவர்களின் மனோநிலையைப் புரிந்து கொண்டதால்தான் நாங்கள் அவர்களின் கூட்டில் இருந்து வெளியேறி வந்தோம்.

அதேபோல் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஓர் அணியின் தலைவர் தமிழ்த் தேசியத்தைப் புறக்கணித்து ஒரு சிங்கள வேட்பாளருடன் சேரவேண்டும் என்றே ஒற்றைக் காலில் நின்றார். அவர் தமிழ்த் தேசிய வேட்பாளரை எதிர்த்தார். தமிழ்த் தேசியப் பற்றாளரான சிறீதரன் மீது கட்சிக்குள் நடவடிக்கை எடுக்கப் பார்க்கும் இந்த நபர் எவ்வாறு எம்மை தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் சேர அழைக்கலாம்? அழைத்தாலும் அவரின் உள் எண்ணம் பற்றிச் சந்தேகம் எழுகின்றது. தமிழ்த் தேசியத்தை உதட்டளவில் பாவிக்கப் பார்க்கின்றாரோ நானறியேன்.

மூன்றாவதாக பகிஸ்கரிப்பு அணியினர் சிங்கள வேட்பாளரை பகிஸ்கரிப்பதாகக் கூறி கடைசியில் தமிழ்த் தேசிய வேட்பாளரையும் பகிஸ்கரித்தனர். இவர்கள் யாவரும் தமிழ்த் தேசியத்திற்கு முன்னுரிமை கொடுத்து வருவதாகத் தெரியவில்லை. சுயநல காரணங்களே அவர்களை இயக்கி வருவதாக நான் உணர்கின்றேன்.

எம் தமிழ் மக்கள் கூட்டணியைப் பொறுத்தவரையில் முதியவர்கள் நாம் பின்னின்று இளைஞர், யுவதிகளை முன்னிறுத்தித் தமிழ்த் தேசியப் பாதையில் அவர்கள் பயணிக்க வழிவகுக்க வேண்டும் என்று நினைக்கின்றோம்.

சிலர் ஒரு கட்சியின் பெயரைச் சொல்லி ஒற்றுமை ஏற்படுத்த முனையலாம். ஆனால் அவர்களின் சிந்தனை தமிழ்த் தேசியம் பாற்பட்டதா அல்லது சுயநலம் பாற்பட்டதா என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறானவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சென்றவர்கள் திரும்பி வாருங்கள் என்று கூறுவது தமிழ்த் தேசியத்துக்காக அல்ல. சுயநல காரணங்களுக்காகவே.

அரியநேத்திரனின் சின்னத்தை சிலர் தமக்குப்பெற்றவுடன்தாமும்அரியநேத்திரனாக உருமாற்றம் பெற்றுவிடப் போவதாகக் கற்பனை செய்து கொள்ளக்கூடாது. உதயசூரியனை சின்னமாக முன்பு எடுத்தவர்கள் தாம் தேர்தலில் வெற்றி பெறப் போவதாகக் கற்பனை செய்தார்கள். ஆனால் எமது தமிழ் வாக்காளர்கள் அந்தச் சின்னத்துக்குப் பதில் குறித்த சின்னத்தில் கேட்டவர்களையே அடையாளம் கண்டு அவர்களைப் புறக்கணித்தார்கள். சின்னம் பெற்றால் சுயநலவாதிகள் பொதுநலவாதிகளாக மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களாக உடனே மாறிவிடுவார்கள் என்று நினைப்பது மடமை.

ஆகவே ஒற்றுமை வேண்டும்; நாம் ஒன்றுபடவேண்டும்; இளைஞர் யுவதிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்; தமிழ்த் தேசியத்தை முழுமனதுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் எந்தவித முரணான கருத்துக்கும் இடமில்;லை.

ஆனால் அதை வேண்டுபவர்களின் கடந்த கால சிந்தனைகளும் நடத்தைகளும் அதற்கு அனுசரணை தருவதாக அமைந்திருந்தனவா என்பதை எமது மக்கள் சிந்திக்க வேண்டும். சுயநலவாதிகளைக்களைந்துஉண்மையாகத் தேசியத்தை விரும்புபவர்கள் யார் என்று அடையாளம்கண்டுஅவர்களைஒன்றிணைக்க முன்வர வேண்டும். ஆகவே நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சேரும் வாய்ப்புக்கள் இல்லை. சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் என்றென்றும் ஒன்று சேராது.

வேண்டுமெனில் தமிழ்த் தேசியத்தில் உண்மையில் ஈடுபட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் எம் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணியில் சேர்ந்து பயணிக்க முடியும்.

## புலமைப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்லுநர்கள் மற்றும் புள்ளியியல் வல்லுநர்கள் அடங்கிய குழு இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளது. 2024ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் கசிந்த மூன்று வினாக்களுக்குமான முழு மதிப்பெண்களையும் வழங்குவதே மிகவும் பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும் என்று இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தப் பரிந்துரைக்கு அமைய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பரீட்சைகள் திணைக்களமும் தீர்மானித்துள்ளது.

இந்த அறிக்கையை மீளாய்வு செய்யவும் பொருத்தமான பரிந்துரைகளை வழங்கவும் கல்வி அமைச்சரினால் உள்ளூர் மற்றும் சர்வதேசநிபுணர்கள்அடங்கியகுழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

மேலும் விடைத்தாள்களைத் திருத்தம் பணிகளை உடனடியாக தொடங்கவும், முடிவுகளை தாமதமின்றி வெளியிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மன அழுத்தம் மற்றும் உளவியல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கூறி, புலமைப் பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்தவேண்டாம் என்று நிபுணர் குழு அறிவுறுத்தியுள்ளது.

செப்டெம்பர் 15ஆம் திகதி நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் கேள்விகள் பரீட்சைக்கு முன்னர் கலந்துரையாடப்பட்டதாக எழுந்த முறைப்பாடுகளை அடுத்து இந்தப் பிரச்சினை உருவானது.

இதையடுத்து, பரீட்சைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

பரீட்சையின் முதல் பாகத்தில் உள்ளதைப் போன்றமூன்றுகேள்விகள்அடங்கியஆவணம் ஒன்று முன்கூட்டியே வெளியாகிவிட்டதாகவும், இந்தக் கேள்விகள் தேர்வுக்கு முந்தைய நாள் சமூகஊடகங்கள்வழியாகபரப்பப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

முதற்கட்ட அறிக்கையின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுத் துறையிடமும் (சிஐடி) முறைப்பாடு செய்யப்பட்டது. சிஐடி பின்னர் கல்விச் செயலாளரிடம் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்துள்ளது, மேற்படி ஆவணம்உண்மையில்பரீட்சைக்குமுன்னர் விநியோகிக்கப்பட்டது மற்றும் தாள் ஹ இல் இருந்து மூன்று கேள்விகள் கசிந்தன என்பதை உறுதிப்படுத்தியது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் வெளியான தகவல்

வினாத்தாள் சர்ச்சை நிலவும் சூழ்நிலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடத்தப்படுமா, இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக 07 பேர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதமர் ஹரினி அமரசூரியவின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் கசியப்பட்டமை தொடர்பில் பரீட்சை திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகளைக் கருத்தில் கொண்டு இக்குழுவால் தீர்மானம் எடுக்கப்படும் என கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(05)

# வாரியப்பொல – சிலாபம் வீதி விபத்தில் ஒருவர் சாவு

*வாரியப்பொல - சிலாபம் வீதியில் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாரியப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.*

*சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கெப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோ ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*விபத்தின்போது, ஓட்டோவின் சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இருவரும் காயமடைந்துள்ள நிலையில் வாரியப்பொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஓட்டோவின் சாரதி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*உலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.*

*காயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து, கெப் வாகனத்தின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியப்பொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)*

# வடக்கு, கிழக்கில் ஊழலற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்

**இன்பராசா தெரிவிப்பு**




எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள முன்னாள் போராளிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஆதரவாளர்கள் மக்களின் அனுசரணையுடன் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சி சுயேச்சையாக வடக்கு, கிழக்கில் போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் தலைவர் கே.இன்பராசா தெரிவித்தார்.

மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது அதிகூடிய சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியினர் சுயேச்சையாக போட்டியிடவுள்ளோம்.

தமிழ் மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இந்த தேர்தல் குறித்து நாங்கள் உங்களைத் தேடி வருவோம். எங்களுக்குப் பூரண ஆதரவை வழங்க வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களுக்காக நாங்கள் எங்கள் உயிரையே அர்ப்பணித்தோம். அங்கவீனமாக்கப்பட்டுள்ளோம். அநாதரவாக்கப்பட்டுள்ளோம். எனவே முன்னாள் விடுதலைப்புலிகள் ஆகிய நாங்கள் இத்தேர்தலில் களமிறங்கவுள்ளோம்.

தற்போதைய ஜனாதிபதியின் ஊழல் அற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை போல் வடக்கு, கிழக்கில் ஊழலற்ற அரசியலை முன்னெடுக்க நாங்கள் போராடுவோம்.

மன்னார் மாவட்ட முன்னாள் விடுதலைப்புலிகளும் எங்களுடன் இணைந்துள்ளனர். எனவே, தமிழ் மக்களும் எங்களுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். – என்றார்.

(05)



# சிவில் அமைப்புகள் அரசியல் கட்சியோடு இணைந்து பயணிப்பது என்றும் முடியாது

## சிவகரன் கூறுகிறார்



சிவில் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்துசெயற்படமுடியாது. மாறாக அவ்வாறு செயற்பட்டால் அது அரசியல் கட்சியாகவே மாறிவிடும் என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சனிக்கிழமை தமிழ்த் தேசிய வாழ்வுரிமைஇயக்கத்தின்ஏற்பாட்டில்மாற்றத்துக்கான மாற்றுவழி எனும் கருப்பொருளில் நடைபெற்ற அரசியல்கலந்துரையாடலின்பின்னர்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் -

இன்று சிவில் அமைப்புக்கள் மற்றும் சமூக மாற்றத்தை விரும்புபவர்களை பகிரங்கமாக அழைத்திருந்தோம். எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஆரோக்கியமான, வெளிப்படையான கலந்துரையாடல் நடைபெற்றது. அதன் பிரகாரம் தேர்தல் அரசியல் கடந்து ஏனைய விடயங்களை கையாளும் நோக்கில் 15 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அக்குழுவானது ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களையும்பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு தமிழ் மக்களின் அடிப்படை சார்ந்த விடயங்களை தேர்தல் அரசியலுக்கு அப்பால் முன்னெடுக்க வேண்டிய விடயங்களை ஆராய்ந்து முன்னோக்கி நகர்த்துவதற்கான செயற்பாட்டில் ஈடுபடும்.

இக்குழுவானது எவ்வித அரசியல் விவகாரங்களிலும் ஈடுபடாது. அரசியல் கட்சிகள் சார்ந்தோ அல்லது இணைந்தோ எந்த செயற்பாட்டையும்முன்னெடுப்பதற்கானதீர்மானம்எவையும் எடுக்கவில்லை.

எதிர்வரும் வாரங்களில், பொதுக் கட்டமைப்புடன் கலந்துரையாடி நாங்கள் தொடர்ந்து, இணைந்து எவ்வாறு பயணிக்கலாம் என்ற நிகழ்ச்சி நிரலை வகுக்க வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளோம்.

பொதுக்கட்டமைப்பானதுஜனாதிபதிதேர்தலுக்காக உருவாக்கப்பட்டுஅரசியல்கட்சிகளுடன்இணைந்து பயணிக்கக்கூடியவர்களாக இருக்கிறது. சிவில் அமைப்புக்களும்அரசியல்கட்சிகளும்ஒன்றிணைந்து செயற்பட முடியாது. மாறாக அவ்வாறு செயற்பட்டால் அதுஅரசியல்கட்சியாகவேமாறிவிடும். ஆகவேசிவில் அமைப்பின் தனித்துவம் இல்லாமல் போய்விடும். இப்போது தேர்தல் அரசியலில் உடன்படிக்கை செய்திருப்பதால் அவர்களும் அரசியல் கட்சிகளாகவே சமூக நிலையில் நோக்கப்படும்.

நாங்கள் அவர்களோடு உரையாடத்தான் இருக்கின்றோம். எதிர்காலத்தில் அரசியலில் செயற்படுவார்களேயானால் அதற்கு நாம் சம்மதிக்கப்போவதில்லை.

எந்தவிதமான குழப்பங்களும் விரிசல்களும் எங்களுக்குள் இல்லை. அவர்கள் அரசியல் விவகாரங்களுக்காக தேர்தலுக்காக முன்னெடுக்கிறார்கள்.

கடந்த 10 வருடங்களாக இவ்விதமான கூட்டங்களை நடாத்திவந்திருக்கின்றோம் என்ற அடிப்படையிலேயே இதனை நாம் நடாத்தினோம். இது ஏட்டிக்குப் போட்டியாக தொடங்கப்படவில்லை. அவ்வாறான நோக்கமும் எமக்கில்லை. தேர்தல் அரசியலில் இந்த அமைப்பு எப்போதும் ஈடுபடாது. - என்றார். (05)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அநுர மத்தேகொட தெரிவு

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக அநுர மத்தேகொடவும், பிரதித் தலைவராக ராசிக்சரூக்கும்நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை இலங்கைசட்டத்தரணிகள் சங்கத்தின்செயலாளர்சத்துரகல்ஹேன தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கௌசல்ய நவரத்ன மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் நலிந்த இந்ததிஸ்ஸ ஆகியோர் பதவி விலகியதால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகசெயலாளர்சத்துர கல்ஹேன மேலும் தெரிவித்துள்ளார். (05)

# லுணுகலையில் சிறுமி மீது பாலியல் துஸ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

சிறுமி ஒருவரை கடுமையான பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகலை, ஜன உதான கம்மான யப்பாம ஹொப்டன் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

5 வயதும் 6 மாதமும் கொண்ட சிறுமியே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

இந்த சிறுமி தனது வீட்டுக்கு அயல் வீடான சந்தேக நபரின் வீட்டுக்கு விளையாடுவதற்காக செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார்.

அப்போது சந்தேகநபர் கடந்த 23 திகதி இந்த சிறுமியை தனது வீட்டில் அறை ஒன்றுக்கு கூட்டிச் சென்று கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அத்துடன் 23 ஆம் திகதி தொடக்கம் 4 நாள்களாக தொடர்ந்தும்இவ்வாறானகுற்றச் செயலில் ஈடுபட்டுள்ளார் என சிறுமி தாயாரிடம் கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து குறித்த சிறுமியின் தாயாரால் வெள்ளிக்கிழமை லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டதை தொடர்ந்தேசந்தேகநபர்இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்தநபர்சிறுமியின்தூரத்து உறவு முறையில் சித்தப்பா என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபரை சனிக்கிழமை பசறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகலுணுகலைபொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2024இல் வெளியிடப்பெற்றது